மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை :– திருமதி.P.அனுராதா, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2024 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 12 ம் நாள் வெள்ளிக்கிழமை

இ.மஎண்.03/2023
உள்
அசல் வழக்கு எண்.62/2021
--------

ஜி.முருகன் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. குட்டி (எ) குருசாமி
2. சார்பதிவாளர், சாத்தூர்
3. மாவட்ட ஆட்சியாளர், விருதுநகர் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு 18.12.2023 ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 05.01.2024–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ஜெகதீஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.வாசவன் அவர்கள் ஆஜராகி எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், மனுதாரர் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151 ன் கீழ் இம்மனுவினை ஏற்று அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், பிராதில் 7 வது பக்கத்தில் நீதிமன்ற கட்டணம் தலைப்பின் கீழ் "அ" பரிகாரத்தில் 2 வது வரியில் தபசில் கண்ட சொத்தின் மதிப்பு ரூ.13,240/– நீக்கம் செய்துவிட்டு ரூ.13,526/– என சேர்க்க வேண்டும் என்றும் "இ" பரிகாரத்தில் 3 வது வரியில் ஆக மொத்தம் நீதிமன்ற கட்டணம் ரூ.397.20 + 150 + 30 = ரூ.580/– என்பதை நீக்கம் செய்து விட்டு ஆக மொத்தம் நீதிமன்ற கட்டணம் ரூ.406+150 = ரூ.586 செலுத்தப்பட்டுள்ளது என

பிராதை சீர்திருத்தம் செய்து தாவா வழக்கினை மேல்நடத்த உத்தரவிடக்கோரி 08.11.2023 ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-**

அசல் வழக்கில் 4 முதல் 9 உத்தேச எதிர்மனுதாரர்கள்/ 4 முதல் 9 உத்தேச பிரதிவாதிகளை வழக்கில் சேர்க்க சொல்லி தாக்கல் செய்த இ.ம.எண்.02/2022 நம்பர் ஏற்பட்டு அதற்கு R2, R3 and R7 எதிருரை தாக்கல் செய்ய 14.10.2023 ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி வழக்கில் "அ" பரிகாரத்திற்கான Court Fee Rs.406/-க்கு பதிலாக ரூ.397/- செலுத்தப்பட்டுள்ளது. Deficit Court Fee Rs.9/- செலுத்த வேண்டி நீதிமன்றம் மூலம் Check slip வழங்கப்பட்டுள்ளது. அதனால் வழக்கில் அசல் பிராது 7 வது பக்கத்தில் நீதிமன்ற கட்டணம் தலைப்பின் கீழ் "அ" பரிகாரத்தில் 2 வது வரியில் தபசில் கண்ட சொத்தின் மதிப்பு ரூ.13,240/-ஐ நீக்கம் செய்துவிட்டு ரூ.13,506/- என சேர்க்க வேண்டும் மற்றும் "இ" பரிகாரத்தில் 3 வது வரியில் ஆக மொத்தம் நீதிமன்ற கட்டணம் ரூ.3972.20 + 150 + 30 = ரூ.586/- செலுத்தப்பட்டுள்ளது என பிராதை சீர்திருத்தம் செய்வது அவசியமாயும், நியாயமாயும் இருக்கிறது என்று மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3) **2 ம் எதிர்மனுதாரர்/2 ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 3 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட் எதிருரை சுருக்கம்:-**

மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர்/வாதி அசல் வழக்கில் செலுத்தப்பட்டுள்ள நீதிமன்ற கட்டணத்தினை திருத்தம் செய்யக்கோரி மனு தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளக் கூடியதில்லை. மேற்படி திருத்தம் செய்யக்கோரி மனு தாக்கல் செய்ய மனுதாரருக்கு எந்த அதிகாரமும் இல்லை. மனுதாரருக்கு check slip கொடுத்ததாகவும், அதனால் திருத்தம் செய்ய கோருவதாக கூறியுள்ளார். நீதிமன்ற ஆய்வின்போது கண்டறியப்பட்டதாக கூறுவது ஏற்றுக் கொள்ளக்கூடியதில்லை. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் குறைத்து மதிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ள நிலையில் அசல் வழக்கானது குறைமதிப்பிட்டு தாக்கல் செய்துள்ள காரணத்தினால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியதாகும். மேலும் குறைமதிப்பீட்டு கட்டணம் செலுத்துவதற்கு சட்டத்தின்படிக்கு தெளிவான சட்டப்பிரிவு உள்ள நிலையில் தாவா

மனு தாக்கல் செய்ய மனுதாரருக்கு எந்த அதிகாரமும் இல்லை. அதனால் மனுதாரர் மனுவானது சட்டப்படிக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும் என்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

7) **<u>தீர்வு</u>**:–

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிருரையும் அதுகுறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரரால் பிராதில் 7 வது பக்கத்தில் நீதிமன்ற கட்டணம் தலைப்பின் கீழ் "அ" பரிகாரத்தில் 2 வது வரியில் தபசில் கண்ட சொத்தின் மதிப்பு ரூ.13,240/– நீக்கம் செய்துவிட்டு ரூ.13,526/– என சேர்க்க வேண்டும் என்றும் "இ" பரிகாரத்தில் 3 வது வரியில் ஆக மொத்தம் நீதிமன்ற கட்டணம் ரூ.397.20 + 150 + 30 = ரூ.580/– என்பதை நீக்கம் செய்து விட்டு ஆக மொத்தம் நீதிமன்ற கட்டணம் ரூ.406+150 = ரூ.586 செலுத்தப்பட்டுள்ளது என பிராதை சீர்திருத்தம் செய்து தாவா வழக்கினை மேல்நடத்த உத்தரவிடக்கோரி 08.11.2023 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். ஒரு வழக்கைப் பொறுத்து நீதிமன்ற கட்டணம் சரியாக செலுத்த வேண்டியது அவசியமான ஒன்றாகும். தவறும்பட்சத்தில் அந்த வழக்கு சரியான நீதிமன்ற முத்திரைக்கட்டணம் செலுத்தாத தோசத்திற்கு ஆட்பட்டுவிட்டும். மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை

அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை, வாதுரைகள் மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, பிராதில் 7 வது பக்கத்தில் நீதிமன்ற கட்டணம் தலைப்பின் கீழ் "அ" பரிகாரத்தில் 2 வது வரியில் தபசில் கண்ட சொத்தின் மதிப்பு ரூ.13,240/− நீக்கம் செய்துவிட்டு ரூ.13,526/− என சேர்க்க வேண்டும் என்றும் "இ" பரிகாரத்தில் 3 வது வரியில் ஆக மொத்தம் நீதிமன்ற கட்டணம் ரூ.397.20 + 150 + 30 = ரூ.580/− என்பதை நீக்கம் செய்து விட்டு ஆக மொத்தம் நீதிமன்ற கட்டணம் ரூ.406+150 = ரூ.586 செலுத்தப்பட்டுள்ளது என பிராஜத சீர்திருத்தம் செய்து தாவா வழக்கினை மேல்நடத்த உத்தரவிடக்கோரி 08.11.2023 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 12 ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை
எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.